# கிறீத்துவின் உயிர்த்தெழு நாள்



Foto: Pixabay

உலகில் எந்த மனிதன் இறந்தாலும், அந்த தினம் துக்க நாளாகத்தான் நினைவு கூரப்படுகிறது. ஆனால், இயேசுவின் சிலுவை மரண தினம் மட்டுமே, "குட் பிரைடே என்றும், பெரிய வெள்ளி என்றும் அழைக்கப்படுகிறது.

கடவுள் தன் சாயலில் ஆதாமை படைத்தார். அவன், கடவுளின் கட்டளையை மீறி நடந்த போது, கீழ்படியாமை என்ற பாவம் உட்பட பல தீய செயல்களால் மரணத்தை சம்பாதித்தான்.

எனவே பாவத்திலிருந்து விடுதலை பெற, அதற்கு பரிகாரம் தேட, இஸ்ரேல் மக்கள் பறவை, மிருகங்களை கொன்று அதன் ரத்தத்தை சிந்தி கடவுளுக்கு பலி செலுத்தினர். இதனால் பாவமன்னிப்பு பெற்றதாக திருப்திப்பட்டனர். இருப்பினும், பாவத்தை விட முடியவில்லை. இந்தக் கொடிய பாவ வழிகளில் இருந்து விடுபட கடவுள், இஸ்ரேல் மக்களுக்கு பத்து கட்டளைகளை விதித்தார். அதனையும் மக்கள் பின்பற்றவில்லை.

பறவை, விலங்கின ரத்தத்தால் மக்களின் பாவத்தை கழுவ முடியாது, எனக்கருதிய கடவுள், மனுக்குலத்துக்காக தானே பலியாக வேண்டுமென்று தீர்மானித்தார். எனவே ஏழையாக, கன்னிப் பெண் மரியாளின் வயிற்றில் பாலகனாக அவதரித்தார்.

தனது 34வது வயதில் பாவத்திலிருந்து மக்களை விடுவிக்க தனது மாசில்லா பரிசுத்த ரத்தத்தை சிலுவையில் சிந்தினார். இயேசு தனது முப்பதாம் வயதில் ஞானஸ்நானம் எடுத்த பின், மூன்றரை வருடங்களாக பல அற்புதங்களை மக்களுக்கு செய்தார். இதனை சகிக்காத யூத மத குருக்களும், ஆசாரியர்களும் இயேசுவை கொல்ல சதி செய்தனர்.

"பஸ்கா பண்டிகைக்கு சீடர்களுடன் ஜெருசலேம் சென்ற இயேசு, அதனை முடித்த பின், கெத்சமனே தோட்டத்துக்கு ஜெபம் செய்ய சென்றார். அப்போது இயேசுவை பிடிக்க, யூதமத குருக்கள், ஆசாரியர்களை அழைத்து சென்ற அவரது சீடரான யூதாஸ் காரியோத் 30 வெள்ளிக்காசுக்காக ஆசைப்பட்டு, அவரை முத்தமிட்டு காட்டிக்கொடுத்தான்.

பிரதான ஆசாரியன் வீட்டில் இயேசுவை இரவு முழுவதும் அடித்து, துன்புறுத்தி மரணத்துக்கு ஏதுவான பொய் சாட்சியை தயாரித்தனர். மறுநாள் ரோம அரசர் ஏரோதுவிடம் விசாரணைக்கு அழைத்து சென்று குற்றப்படுத்தினர். ஆனால், அரசரோ இவர் மீது குற்றம் காணாமல், கவர்னர் பிலாத்துவிடம் அனுப்பி வைத்தார். பிலாத்துவும் இவர்மீது எந்த குற்றமும் காணவில்லை. இவரின் ரத்தப்பலி என்மீது சுமராது, என கைகளை கழுவி, ""இவரை இஷ்டப்படி செய்யுங்கள், என கூறி இயேசுவை அவர்களிடம் ஒப்படைத்தார். பின் யூத மதக்குருக்கள் அதிகபட்ச தண்டனையாக சிலுவையில் அறைந்து கொல்ல முடிவு செய்தனர். இயேசுவை சாட்டையால் அடித்து, தலையில் முள்முடி சூட்டி, அதிக பாரமுள்ள சிலுவை மரத்தை தூக்க செய்து, "கபாலஸ்தலம் எனப்படும் கொல்கொதா என்ற இடத்திற்கு ஊர்வலமாக அழைத்து சென்று சிலுவை மரத்தில் ஏற்றினர்.

இயேசுவைச் சிலுவையில் பார்த்த மதியில்லாத மக்கள் கூட்டம் அவரைக் கேலி செய்தது. 'இயேசுவே நீதான் இறைவன் மகனா? இறைவன் மகனே என்றால் இறங்கி வா பார்ப்போம்' என்று கூறிச் சிரித்தனர். மதகுருக்கள், 'கடவுள் என்று கதறிக் கிடந்தான். கடவுள் இன்று காக்க வரட்டும். இவன் இறைவன் மகன் என்பது உண்மையானால் இறைவன் இவனைக் காக்க வரட்டும். தன்னைத் தான் காத்துக் கொள்ள இயலாதவனை மக்கள் எப்படி மதிப்பார்கள்?' என்று ஏளனம் செய்தனர்.

சிலுவையில் தொங்கிய இயேசு அன்புடன், 'தந்தாய் இவரைத்தாம் மன்னிப்பீர். செய்வதறியாது செய்கிறார்கள்' என்றார். இயேசுவின் அருகிலிருந்த ஒரு திருடன், 'மீட்பராகிய நீங்கள் வேதனையிலிருந்து எங்களையும் காப்பாற்றுங்கள்' என்றான். உடனே இன்னொரு திருடன் இயேசுவைப் பார்த்து 'இயேசு குமாரா நீங்கள் போகுமிடத்தில் இறைவன் அருகில் என்னையும் அழைத்துச் சென்று பாவங்கள் தீர்த்து உங்கள் அருகில் என்னையும் வைத்துக் கொள்ளுங்கள்' என்றான். இயேசு அவனை நோக்கி, 'பரலோகத்தில் நீயும் என் பக்கத்தில் இருப்பாய்' என்றார்.

பிற்பகல் நேரத்தில் வானில் இருள் சூழ்ந்தது. மரியாளும், மற்றொரு பெண்ணும் அருளப்பர் என்னும் சீடரும் கண்ணீர் சிந்தியவாறு சிலுவையின் அருகே நின்றனர். இயேசு அவர்கள் இருவரையும் அழைத்து, 'அம்மா! அவர் உனக்கு மகன், அருளப்பா! அவர் உனக்கு அன்னை' என்று கூறி இருவரையும் அன்பில் இணைத்தார். அருளப்பர் மரியன்னைக்கு மகனாகும் சிறப்புப் பெற்றார். பிற்பகல் மூன்று மணிக்கு இயேசு, 'இறைவா! இறைவா என்னை ஏனோ கைவிட்டாயே! கைவிட்டாயே!' என்றார். மரண நேரம் வந்தது என்று எண்ணி ஆத்ம தாகத்தைக் கருத்தில் கொண்டு 'தாகம் எனக்கு' என்றார். அவர் கூறியதன் உட்பொருளை அறியாத வீரர் கடல் காளானைப் புளிக்காடியில் தோய்த்துக் கட்டையில் நீட்டினர். அதைச் சுவைத்த இயேசு 'எல்லாம் முடிந்தது' என்றார். அதன் பொருள் 'இறைவன் எனக்குத் தந்த கடமை, இவ்வுலகில் என் கடமை எல்லாம் முடிந்தது' என்பதாகும்.

எல்லாம் என்றசொல்லின் பொருளை நல்லோர் யாவரும் நன்றே அறிவார் தந்தை எனக்குத் தந்ததோர் கடமை இந்த உலகில் நான் ஏற்றதோர் கடமை எல்லாம் முடிந்தது என மனம் நிறைந்தார்.

நீல வானில் இடிஇடித்தது. சூரியன் மறைந்தது. பாறையோடு பூமி வெடித்தது. கல்லறைகள் பிளந்தன. கோவிலின் திரைச்சீலை பாதியாய்க் கிழிந்தது. மரங்கள் சாய்ந்தன. விண்மீன்கள் கீழே விழுந்தன. காவலர்கள் உடல் சிலிர்த்து நடுங்கி நின்றனர். 'தேவமைந்தன்' என்ற செய்தி உண்மையே எனக் கண்டுகொண்டனர்.

மக்கள் கூட்டம் அழுதபடியே சென்றது. சீடர்களும் மற்ற பெண்களும் மரியன்னைக்கு ஆறுதல் கூறினர். தாயிருக்கப் பிள்ளை சாகும் வேதனை கொஞ்சமோ எனக் கேட்கிறார் கவிஞர்.

இயேசு இறந்ததைத் தெரிவிக்க, காவலர்கள் ஈட்டியால் இயேசுவின் விலாப்புறத்தில் துளைத்தனர். இரத்தமும் தண்ணீரும் வடிந்தன. வேதநூலில் மீட்பரின் பாதங்களுக்கும் எலும்புகளுக்கும் பங்கமில்லை. இயேசுவின் விலாப்புறத்தில் குத்தி நோக்குவார்கள் என்று கூறியிருந்த வாக்கும் பலித்தது.

இயேசுவின் சீடர்களில் ஒருவரான அரிமத்தியாவூர் சூசை என்பவர் இயேசுவின் உடலை அடக்கம் செய்வதற்காகக் கேட்டார். மன்னனும் அதற்கு அனுமதியளித்தான். இயேசுவின் உடலை இரு வீரர்கள் துணையோடு இறக்கி வைத்தார் சூசை. யூதர்கள் முறைப்படி அடக்கம் செய்வதற்கு ஏற்ற பொருள்களைக் கொண்டும் வாசனைப் பொருட்கள் பலவற்றை வைத்தும் இயேசுவை மெல்லிய துணியால் சுற்றிக் கட்டி வைத்தார்கள். தோட்டத்தில் ஒரு புதிய இடத்தில் இயேசுவின் உடலைப் புதைத்தனர்.

அரண்மனையில் மதகுருமார்கள் அரசனிடம், 'இயேசு கூட்டங்களில் பேசும்போது 'இறப்பேன்; ஆனால் மூன்று நாட்களில் மீண்டும் உயிர்த்தெழுவேன்' என உரைத்தனன்; மாயங்கள் செய்தவன் அவன். அவனுடைய சீடர்கள் பிணத்தை எடுத்துச் சென்று பின்னர் 'உயிர்த்தான்' என்றும் கூறுவர். எனவே அவன் கல்லறையை மூன்று நாட்கள் காவல் காக்க வீரர்களை அனுப்புங்கள்' எனக் கேட்டனர். மன்னன் மறுத்து 'உங்களிடம் காவலர்கள் உள்ளனர். நீங்களே அனுப்புங்கள்' என்று கூறிவிட்டான். மதகுருமார்கள் அதனை ஏற்று இயேசுவின் கல்லறையில் மூடிய கல்லில் முத்திரையிட்டு மூன்று நாட்கள் காவல் காக்குமாறு கட்டளையிட்டனர்.

இயேசு சிலுவையில் மொழிந்த ஏழு வார்த்தைகள்:

1.கடவுளே, இவர்களை மன்னியும் தாங்கள் செய்வது, இன்னதென்று அறியாதிருக்கிறார்கள். 2.தனது வலது பக்கத்தில் இருந்த கள்ளனை பார்த்து, நீ இன்றைக்கும் என்னுடனே பரதீசிலிருப்பாய். 3.தன் தாயை நோக்கி, இதோ உன் மகன் என்றும், சீசன் யோவானை நோக்கி, இதோ உன் தாய் என்றார். 4.கடவுளே, கடவுளே ஏன் என்னை கைவிட்டீர். 5.தாகமாயிருக்கிறேன். 6. எல்லாம் முடிந்தது. 7.கடவுளே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்.

நற்செயல்கள் புரிந்து, சிலுவை மரணத்தைச் சந்தித்து, மனிதகுலத்துக்காக, இயேசுநாதர் பாவமன்னிப்பை பெற்ற நாளே பெரிய வெள்ளி தினமாகும்.

நன்றி: வீரகேசரி இணையத்தளம்